2020 மார்ச் 12]

இருக்க வேண்டும். அதேபோல், கால்நடை கிளை நிலையங்கள் 3 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். அதேபோல், கால்நடை கிளை நிலையம் செயல்படுவதற்கு வாடகையில்லா கட்டடம் அளிக்கப்பட வேண்டும். இதுபோன்ற விதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமேயானால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கூடநகர் பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு அதிகாரிகளை அனுப்பி வைத்து, அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

சி.டி. ஸ்கேன் வசதி

***42765—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சியிலுள்ள அரசு வட்ட மருத்துவமனைக்கு கணினி வழி உடலூறுப்பு ஊடுகதிர்படம் (*C.T. Scan*) வசதி செய்ய அரசு முன்வருமா?*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, ஆலங்குளத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மருத்துவமனையில் கணினிவழி உடலுறுப்பு ஊடுகதிர்படம் அதாவது C.T. Scan *வசதி செய்ய தற்சமயம் அவசியம் எழவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், 35 கிலோ மீட்டர் அருகில் இருக்கக்கூடிய தென்காசி மருத்துவமனையில்* C.T. Scan *பொருத்தப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோல, 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய திருநெல்வேலி மருத்துவமனையில் 2* C.T. Scan *கருவிகளும், ஒரு* M.R.I. Scan *கருவியும் நிறுவப்பட்டு, ஒரு நாளில்*

கிட்டத்தட்ட 100–லிருந்து 115 பேர் C.T. Scan சேவையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் Dialysis unit உள்ளிட்ட பல சிறப்பு வசதிகள் தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுத்தான் செய்யப்பட்டிருக்கின்றன. C.T. Scan நிறுவ வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதி முற்றிலும் மலைப் பகுதியில் அமைந்திருப்பதால், அங்கே இயங்குகின்ற கூடலூர் வட்டத் தலைமை மருத்துவமனையில் மகப்பேறு பிரசவங்கள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குப் போதிய இடவசதி இல்லாமலும், நவீன வசதிகள் இல்லாமலும், இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூடலூர் வட்டத் தலைமை மருத்துவமனைக்கு மகப்பேறுக்கு என்று கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டும். அதைப்போல, கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் நிறைய பேர் சிறுநீரக செயலிழப்பு நோயினாலும், சிறுநீரக நோயினாலும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் Dialysis செய்வதற்காக கோவைக்கு வர வேண்டியிருக்கிறது அல்லது ஊட்டிக்கு வர வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் அவர்கள் அண்டை மாநிலமான கேரளாவிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. தினமும் ஒருவர் ஒருமுறை சிகிச்சை பெற்றுத் திரும்பி வர 1,000 ரூபாய் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு, அங்கே ஒரு Dialysis unit–ஐ அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே technicians இருக்கிறார்கள்; அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன, equipments–ம் இருக்கின்றன. ஆனால், கட்டடம் இல்லாத காரணத்தினால், அங்கே dialysis செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதைப்போல பிரசவத்திற்கும் கட்டட வசதியில்லை. ஏற்கெனவே, பலமுறை இந்த மாமன்றத்தில் இதுகுறித்து கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வாய்ப்பு கேட்டீர்கள். வாய்ப்பு கொடுத்தால், சீக்கிரம் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள். என்ன முறை இது?*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சூழ்நிலையின் தீவிரத்தைக் கருத்தில்கொண்டு இதனை நிறைவேற்றித் தருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூடலூரில்* dialysis *சிகிச்சை முறையை அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலனை செய்து, வெகு விரைவிலே நிறைவேற்றும் என்ற நல்ல செய்தியை சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, நீலகிரி மாவட்டத்திலிருந்து கேரளாவிற்குச் செல்வதாலும், நீலகிரி மாவட்டத்திலிருந்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்குச் செல்வதாலும் சிரமங்கள் ஏற்படுவதாகச் சொன்னார்கள். நானும் கூடலூர் அரசு மருத்துவமனையை இரண்டு முறை ஆய்வு செய்திருக்கிறேன். அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கைக்கிணங்க மகப்பேறு சிறப்பு சிகிச்சைக்கென தனிக் கட்டடம் கட்டும் பணி அரசினுடைய கனிவான பரிசீலனையில் இருக்கிறது.*

மேலும், நீலகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி வருமா என்று பலர் எதிர்பார்த்த சூழ்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவக் கல்லூரியை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறையில் மருத்துவர் நியமனம் என்பது ஒரு சவாலாக இருக்கக்கூடிய நீலகிரி மாவட்டத்தில் ரூ.325 கோடி மதிப்பீட்டில் மகத்தான மருத்துவக் கல்லூரியை அரசு கொடுத்திருக்கிறது. இனி நீலகிரி மாவட்டத்திலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக கேரளாவிற்கோ, கோயம்புத்தூருக்கோ செல்ல வேண்டிய நிலை இல்லை. அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதிபடுத்தியிருக்கிறது என்கிற நல்ல தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

[2020 மார்ச் 12

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சிக்குட்பட்ட ஆரம்பசுகாதாரநிலையத்திற்குஒருநாளைக்கு 300 முதல் 400 பேர் நோயாளிகளாக வந்து செல்கின்றார்கள். அங்கு போதுமான மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறது; போதுமான செவிலியர்கள் இல்லாத நிலை இருக்கிறது; போதுமான மருந்து வைக்கக்கூடிய இடம்கூட இல்லை.* Pharmacy *இல்லாத நிலையும் அங்கே இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அங்கு வந்து செல்கின்ற நோயாளிகள் சிரமப்படுகின்றனர். தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு மீட்டர் இடைவெளிவிட்டு தள்ளி நிற்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்கின்ற நிலை அங்கே இருக்கிறது. அதுபோல் குடிநீர் வசதி உள்ளிட்ட போதுமான வசதிகள் இல்லாத நிலை இருக்கிறது. அமர்வதற்குக்கூட இருக்கை வசதிகள் இல்லாமல் இருக்கிறது. கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கோ, குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கோ தேவையான நிதியை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். மேலும், மேற்கு தாம்பரத்தில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அங்கு இருக்கின்றன. இரண்டு வாரங்களுக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை அ.தி.மு.க.-வினுடைய நகர மன்ற உறுப்பினர் அந்த மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். அங்கே நாய்க் கடிக்குத் தேவையான மருந்துகூட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, கேள்வியைக் கேளுங்கள் என்று சொன்னால், இதுபோன்று விரிவாகப் பேசினால், அடுத்தடுத்த உறுப்பினர்களுக்கு நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்?*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மருத்துவமனையில் போதுமான வசதிகள் இருந்தும், நாய்க் கடிக்கு மட்டும் மருந்து இல்லை. அ.தி.மு.க.-வின் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் என்னோடு தொலைபேசியில் தொடர்பு*

2020 மார்ச் 12]

கொண்டு பேசினார். அந்த மருத்துவமனையை நான் நேரில் சென்று பார்த்தேன். அங்குள்ள உண்மை நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேறு ஒன்றையும் நான் சொல்ல வரவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் சரி செய்வதோடு, பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான வசதிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பீர்க்கன்கரணை அரசு மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, நாய்க் கடி மருந்து பற்றிப் பேசினார்கள். தமிழ்நாடு முழுவதும் நாய்க் கடி மருந்து மட்டுமல்ல, பொதுவாக விஷக்கடி உள்ளிட்ட எல்லா மருந்துகளும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய வகையில் Tamilnadu Medical Services Corporation Limited *மூலமாக* purchase *செய்யப்பட்டு, தாலுகா வரையிலுள்ள மருத்துவமனைகளில் மருந்துகள் கிடைப்பதை அரசு உறுதி செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஒரு விஷயம் குறித்து அரசு உடனடியாக ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதோடு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்காகவும் ஒரு கருத்தைச் சேர்த்து பிரதிபலிக்க விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு நாளைக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரக்கூடியவர்களுடைய எண்ணிக்கை 5 இலட்சமாக இருந்தது. தற்பொழுது, ஒரு நாளைக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரக்கூடியவர்களுடைய எண்ணிக்கை 8 இலட்சமாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. C.T. Scan*–ஐப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்பு, ஓராண்டுக்கு 5 இலட்சம் பேர்* C.T. Scan*–ஐ அரசு மருத்துவமனைகளில்*

எடுத்திருக்கிறார்கள். இப்போது 11 இலட்சம் பேர் C.T. Scan–ஐ எடுக்கிறார்கள். M.R.I. Scan–ஐ 50,000 பேர் எடுத்தார்கள். இந்தாண்டு 1,06,000 பேர் M.R.I. Scan–ஐ எடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தற்போது ரூ.20 கோடி மதிப்பில் 10 Linear Accelerators; இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ரூ.10 கோடி மதிப்பிலான PET Scan வசதி 5 இடங்களில் installation செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஒரு Linear Accelerator கருவியின் விலை ரூ.20 கோடி. அந்தக் கருவியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். அதேபோன்று Cath Lab–ம் அப்படித்தான். மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தாம்பரம் மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து மாவட்ட மருத்துவமனைகளும் சிறப்பாகச் செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டு, அங்கே Trauma Care Centre தரமாக இயங்கி வருகிறது. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும், குறிப்பாக தாம்பரம் உள்ளிட்ட எல்லா மருத்துவமனைகளிலும் இந்த வசதிகள் உள்ளன. மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, நம்முடைய மருத்துவனைகளின் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கின்றோம். இருப்பினும், மக்களுக்குக் கூடுதல் தேவைகள், சேவைகள் தேவைப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற பீர்க்கன்கரணை மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளையும், மக்கள் நல்வாழ்வுத் துறை செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், சற்று பொறுங்கள். அவர் பேசிய பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் பொற்காலம் என்றால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி நடைபெறும் இந்தக் காலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு ஒரே காலத்தில், ஒரே நேரத்தில் 11 மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை

2020 மார்ச் 12]

உருவாக்கி, சாதனை படைத்திருக்கிற அம்மா அரசின் சுறுசுறுப்பான நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் 3 ஆண்டுகாலமாக ஒரு கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறேன். பொள்ளாச்சி பகுதியில் கேரள மாநில எல்லையில் அமைந்திருக்கிற ராமபட்டணம் ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்பகுதியில் அடிக்கடி விஷப் பாம்புக் கடி ஏற்படுகின்ற காரணத்தினால், ராமபட்டணம் ஆரம்ப சுகாதார நிலையத்தை இந்த ஆண்டே, இந்தக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியின்படி, 30 படுக்கை வசதிகொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, நல்ல பதிலை எதிர்பார்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தங்கள் தொகுதிக்கு பல்வேறு கோரிக்கைகளைத் திறம்பட கேட்டுப் பெறுவதில் மிகப் பெரிய சாமர்த்தியத்தைக் கொண்டு, எங்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய மூத்த உறுப்பினர் ஆவார். அவர் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றப் பேரவையில் மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் இதேபோன்று, சாதுர்யமாக இரண்டு கோரிக்கைகளை வைத்ததன் அடிப்படையில் ரூ.20 கோடியில் பொள்ளாச்சியில் மகப்பேறு CEmONC Centre-க்காக அவரே அடிக்கல் நாட்டி, அதற்குப் பூமி பூஜை போட்டு அப்பகுதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் சொன்னதுபோல், விஷக் கடிக்கு பொள்ளாச்சி மருத்துவமனையை Research Centre ஆக உருவாக்கி நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று அவர் கேட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கொடுக்கப்பட்டு, நானும், மாண்புமிகு பொள்ளாச்சியாரும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அண்ணன் திரு. வேலுமணி அவர்களுடன் சேர்ந்து அதனைத் திறந்து வைத்திருக்கின்றோம். அதோடு சேர்த்து அவருடைய சாமர்த்தியத்தின் பேரில் கேட்ட இந்தக் கோரிக்கையும் நிறைவேறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய்க் கடிக்கு மருந்து கொடுப்பது இருக்கட்டும். பொதுவாகவே, முன்பெல்லாம் கிராமங்களில் 10 நாய்கள் அல்லது 20 நாய்கள் இருக்கும். தற்போது பார்த்தோமானால், 200 நாய்கள், 300 நாய்கள் இருக்கின்றன. தெருக்களில் எங்கு பார்த்தாலும் நாய்கள் ஓடுகின்றன. ஒன்றை ஒன்று கடித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு யாரும் எந்த ஊசியும் போடுவதில்லை. இவற்றில் வெறி நாய் எது, நல்ல நாய் எது என்று தெரிவதில்லை. அவை பல நபர்களை ஓடிச்சென்று கடித்து விடுகின்றன. எனவே, நீங்கள் கடித்த பிறகு மருந்து போடுவதற்குப் பதிலாக, ** மேனகா காந்தி அம்மையார் அவர்கள் அவற்றையெல்லாம் கொல்லக் கூடாது என்று சொல்வார்கள். ** உள்ளபடி உண்மையைச் சொல்கிறேன். ஊர்களில் பார்த்தால் நாய்கள் மந்தை மந்தையாகப் போய்க் கொண்டிருக்கின்றன. தெருக்களில் சிறிய குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன; பல ஊர்களில் இதுதான் சவாலாக இருக்கின்றது. எனவே, நாய்க் கடிக்கு மருந்து கொடுப்பதைவிட, நாய்களுடைய பெருக்கத்தைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பில் வேண்டாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேள்விக்குப் பதில், நாய்களுக்கும் கால்நடை பராமரிப்புத் துறையில் family planning, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நாய்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுகிறது. (சிரிப்பு) அதன் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எனது பக்கத்திலிருக்கக்கூடிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 மார்ச் 12]

ஏற்கெனவே, இந்த வெறிநாய்க் கடி அனைத்திற்கும் பொதுவாக Anti Rabies Vaccine *போடப்படுகிறது. ஒரு காலத்தில் இந்த வெறிநாய்க் கடி அதிக அளவில் இருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை இல்லை. முன்பெல்லாம் நாய்க் கடி என்றால் நாம் அனைவருமே பயப்படும் சூழ்நிலை இருந்தது. நாய் கடித்தால் தொப்புளைச் சுற்றி 16 ஊசிகள் போட வேண்டும் என்று நம்மை பயமுறுத்துவதுண்டு. தற்போது அதுபோன்ற நிலை இல்லை.* Anti Rabies Vaccine *தற்போது போடப்படுகின்றது. அதன்மூலம் நாய்க்கடிக்கான மருந்துகள் செலுத்தப்படும்போது, அந்த நாய்க் கடியின்மூலம் பரவக்கூடிய கிருமியால் ஏற்படக்கூடிய இறப்பே இல்லாத நிலையை இன்றைக்கு உறுதிப்படுத்தியிருக்கிறோம். இருப்பினும் தாங்கள் குறிப்பிடுகின்ற அந்த மருந்துகள் தாலுகா அளவில்* additional P.H.C.*-ல் இருப்பதைத் தொடர்ந்து அரசு உறுதி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

உலர்களம்

***48509—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழக்குப்பம் ஊராட்சி, காலனி பகுதியில் உலர்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.